# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.07 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 07 | தொழில் | - | டீ கடை |
| பெயர் | - | கிருஷ்ணமூர்த்தி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அண்ணாமலை | சமயம் | - | |
| கிராமம் | - | முத்துமுடி எஸ்டேட் | வயது | - | 76/2026 |
| சாதி | - | | | | |

<u>26-03-2026</u>

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை.)**

(3-ம் எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து முத்துமுடி எஸ்டேட்டில் டீ கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்பிரபு என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். 3-ம் எதிரி கண்ணன் என்பவரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 10.06.2025-ம் தேதி 14.45 மணியளவில் முடீஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் (வால்பாறை பொறுப்பு) குற்ற எண்.63/2025 வழக்கு தொடர்பாக இவ்வழக்கின் எதிரி சஞ்சய்

**என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட Yamaha கருப்பு நிற இருசக்கர வாகனத்தை என் முன்பாகவும், தாமஸ் என்பவரின் முன்பாகவும் மகஜரில் கைப்பற்றினார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், தாமஸ் என்பவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 08-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 08 | தொழில் | - | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | திரு. வேல்முருகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அழகப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை காவல் நிலையம் | வயது | - | 58/2026 |
| சாதி | - | | | | |

**26-03-2026**

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை.)**

(3-ம் எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

(அரசு தரப்பில் BNSS பிரிவு 348-ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுசாட்சி கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது, வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளதாலும், நீதிமன்ற நேரத்தை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் 1110 திரு.சிவக்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.குணசேகரன் ஆகியோர் தற்போது வேறு காவல் நிலையத்தில் பணியாற்றி வருதாலும், அவர்களுக்கு பதிலாக நான் சாட்சியம் அளிப்பதற்கு BNSS பிரிவு 348-ன் கீழ் மனு தாக்கல் செய்து, நீதிமன்ற அனுமதியுடன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

2. கடந்த 10.06.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய தலைமைக்காவலர் 1110 திரு.சிவக்குமார் நிலைய அலுவலில் இருந்த போது, வால்பாறை எம்.ஜீ.ஆர் நகரை சேர்ந்த சாமுவேல் மகன் ராஜேஸ்பிரபு (வயது 45/2025) என்பவர் நிலையம் ஆஜராகி

கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண். 63/2025 சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 115(2), 351(3) BNS-ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். ( **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கு கோப்பினை முடீஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.குணசேகரன் (பொறுப்பு வால்பாறை காவல் நிலையம்) தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே காலை 11.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சாகுல்அமித் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.5-ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.30 மணிக்கு சம்பவயிடத்திலிருந்து கைக்கு அடக்கமான கல் ஒன்றை மகஜரில் கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ராஜேஸ்பிரபு , முருகன், மணி, சாகுல் அமித், கிருஷ்ணன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், தனது புலன் விசாரணையின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவரவே எதிரிகளை தேடி சென்ற போது, அன்றைய தினமே 14.30 மணிக்கு முடீஸ் பஸ் ஸ்டாப் அருகில் வைத்து எதிரிகள் சிவசக்தி, சஞ்சய், மற்றும் கண்ணன் ஆகியோரை காரணம் கூறி கைது செய்து, நிலையம் அழைத்து வந்தார். பின்னர் 14.45 மணிக்கு சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி மற்றும் தாமஸ் ஆகியோர் முன்னிலையில் எதிரி சஞ்சய் என்பவரிடமிருந்து Yamaha கருப்பு நிற இருசக்கர வாகனத்தை மகஜரில் கைப்பற்றியுள்ளார். (**அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். தடய பொருட்களை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். ( **கைக்கு அடக்கமான கல்லுக்கான படிவம் 91 அ.சா.ஆ.9-ஆகவும், Yamaha கருப்பு நிற இருசக்கர வாகனத்திற்கான படிவம் 91- அ.சா.ஆ.10-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அதன் PR.No.24/2025 ஆகும். கைக்கு அடக்கமான கல் அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, தாமஸ், TNSTC கிளை மேலாளர் ராமமூர்த்தி ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.பிரதீப் என்பவரை 29.07.2025-ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றுள்ளார். ( **அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.11-ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.12-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** மருத்துவர் தனது காயச்சான்றில் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், தனது புலன் விசாரணையின் அடிப்படையிலும் வழக்கின்

சட்டப்பிரிவினை 126(2), 296(b), 115(2), 351(3) BNS-லிருந்து சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 115(2), 351(3), 132 BNS-ஆக பிரிவு மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் 1110 திரு.சிவக்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 29.07.2025-ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 115(2), 351(3), 132 BNS-ன் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். சாட்சிகள் வாக்குமூலத்தில் உள்ளவாறு போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். இருந்த போதும், எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. தற்போது நான் வால்பாறையில் உள்ள எந்த காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன் என்றால் வால்பாறை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அல்ல என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,**B.A.,B.L.,**)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.